## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## O.S. No.386/2023

**28.03.2025**

## P.W.2- கொடிவீரணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் விவசாயம் பார்த்தும், லோடுமேனாகவும் வேலை பார்த்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. என்னை அர்ச்சுணன் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். 1ம் பிரதிவாதி எனக்கு பங்காளி உறவுமுறை ஆவார். 2ம் பிரதிவாதி, 1வது பிரதிவாதிக்கு 2வது மனைவி என்றால் தெரியாது. தாவா பத்திரம் ஈடுகடன் பத்திரமாகும். வாதியிடம் 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து 2017ல் பிப்ரவரி மாதம் ஒருநாள் கடன் வாங்கினார்கள். தேதி ஞாபகமில்லை. பணமானது கையிலிருந்து வாதி கொடுத்தார். ரூ.1,36,000த்தை 2ம் பிரதிவாதியின் கையில் கொடுத்தார். பத்திரத்தை யார் தயார் செய்தார் என்றால் வாதி, நான் மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் தயார் செய்தோம். மேற்படி பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். நாங்கள் எல்லோரும் சேர்ந்து தான் பத்திரத்தை தயார் செய்தோம். ஆவணங்களை தயார் செய்தவதற்கு உரிமம் என்னிடம் இல்லை. முதலில் பாண்டியம்மாள் மேற்படி பத்திரத்தில் கையெழுத்து செய்தார். இரண்டாவதாக யாரும் கையெழுத்து செய்யவில்லை. மேற்படி பத்திரம் தயார் செய்வதற்கு ஆவணங்களாக பாண்டியம்மாள் பெயரில் உள்ள வீட்டு பத்திரம், வீட்டு வரி ரசீது, லட்சுமணன் பெயரில் உள்ள பட்டா ஆகியவை கொண்டு தயார் செய்யப்பட்டது. ரூ.500 கட்டுகளாக மூன்று கட்டுகள் கொடுத்தார். மேற்படி பணத்தை 1, 2 பிரதிவாதிகள் எண்ணி பார்த்தார்கள். பத்திரம் பதிவு செய்தபின்பு சிடி கொடுத்தார்களா என்றால் தெரியாது. மேற்படி பத்திரத்தில் கடன் கொடுத்தவர் கையெழுத்து செய்யவில்லை. நான் பத்திரத்தை படித்து பார்க்கவில்லை. பத்திரம் பதிவு செய்ய முத்திரை தாள்களை 1, 2 பிரதிவாதிகள் வாங்கினார்கள். பத்திர செலவை கடன் தொகையில் சேர்க்கவில்லை. வாதி, 1 , 2 பிரதிவாதிகளுக்கு பணம் கொடுக்கவில்லை

என்றால் சரியல்ல. ரூ.90,000 விஸ்வநாதன் மனைவி பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதி, கடனுக்கு வட்டி செலுத்தமாமல் உள்ளார்கள் என்று சொன்னாரா என்றால் அசலும், வட்டியும் கொடுக்கவில்லை என சொன்னார். பத்திரமானது செக்காணூரனியில் தயார் செய்யப்பட்டது. முத்துச்செல்வம் பத்திர எழுத்தர் ஆவார். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென
ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால்
கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.